1972 மார்ச் 21]

இராஜபாளையம், விருதுநகர் துணை வட்டங்கள்.

* 608. வின.—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு உணவு–வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்திலுள்ள இராஜபாளையம், விருது நகர் ஆகிய இரண்டு ரெவின்யூ துணை வட்டங்களை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் இராசபாளையம், விருதுநகர் ஆகிய துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தும் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதன்மேல் வருவாய் வாரியத்தின் குறிப்புரை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, துணை வட்டங்களை வட்டங்களாக மாற்றுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணை வட்டங்களை வட்டங்களாக மாற்றுவதற்கு அதிலிருக்கிற ஜனத்தொகை, அதிலிருக்கிற வருவாய், இவைகளையெல்லாம் தகுதியாக வைத்துச் செய்கிறார்கள். மேற்கொண்டு சில தகவல்கள் அங்கிருந்து எதிர்ப்பார்க்கின்ற காரணத்தினுல் தாமதமாகிறது. தகவல் வந்தவுடன் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இராஜபாளையம், விருதுநகர் துணை மாவட்டங்கள் அதிகமான பகுதியை உள்ளடக்கி யிருப்பதால், விரைவிலே அவைகளை வட்டங்களாக மாற்றுவதற்கு அரசு முடிவு எடுக்குமா? எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வருவாய்த் துறை வாரியத்தி லிருந்து சில குறிப்புகள் எதிர்ப்பார்க்கிறோம். அவைகள் கிடைத்த வுடன் அரசாங்கம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, ஏற்கனவே மானாமதுரை தனி வட்டமாக இருந்து, இப்போது அது துணை வட்டமாக இருக்கிறது. அதை வட்டமாக்குவதற்குரிய எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். எனவே, அரசாங்கம் அதை தனி வட்டமாக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்குத் தனி கேள்வி போடவும்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, இளையாங்குடி இப்போது சப்–தாலூகாவாக இருக்கிறது. அதைத் தாலூகாவாக மாற்றும் அத்திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்ற அறிக்கை எதுவும் அரசாங்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் விசாரித்துப் பதில் சொல்லலாம்.

Development of Coir Industry.

* 609 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have drawn a Comprehensive Scheme for planned development of coir industry in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) ஊற வைக்காத தென்னை மட்டைகளிலிருந்து இயந்திரங்களால் நார் உறிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முன்வருவோர்களுக்கு நிலம் வாங்க, கட்டிடங்கள் கட்ட, இயந்திரங்கள் வாங்க, மேலும், மூலதனத்திற்காகவும் அரசு தொழில் உதவி கடன் சட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படும்.

உறிக்கப்பட்ட நார்களை கிடங்கில் சேமித்து வைத்து விற்க முன் வருவோர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு மைய கூட்டுறவு உதவிச் சங்கம் ஏற்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.